கட்டித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வந்த பிறகு, 1,058 நியாய விலைக் கடைகளுக்குப் புதிதாக சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. குறிப்பாக எடுத்துக்கொள்வோமானால், அந்தச் சங்கம் வளமான சங்கமாக இருந்தால், அந்தச் சங்கமே கட்டடத்தைக் கட்டிக்கொள்ளலாம். இல்லாதபட்சத்தில், மாவட்ட ஊராட்சி முகமை நிதியிலிருந்தோ அல்லது சமூக நிதியிலிருந்தோ அல்லது சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொடுக்கும் நிதியிலிருந்தோ அங்கு இடம் இருக்கும்பட்சத்தில் சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட, வருகிற காலத்தில் தங்கள் நிதியைக் கொடுக்கும்பட்சத்தில், இடம் இருக்கும்பட்சத்தில் அங்கு நியாய விலைக் கடைகள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

110—

உணவு பதப்படுத்துதல்

***30668—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. தொழில் முனைவோர்கள் யாராவது முன்வந்தார்கள்

என்று சொன்னால், டிட்கோவுடன் கூட்டு முயற்சியின்பேரில் அங்கு தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முயற்சி செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தலைவர்களில் ஒப்பற்ற தலைவராக வாழ்ந்துகொண்டிருக்கின்ற, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 99 சதவீதம் வெற்றியைப் பெற்று, இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற அளவுக்கு சிறப்பான ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்ற, இந்தியாவின் முதன்மை முதலமைச்சராக வாழ்ந்து கொண்டிருக்கின்ற, அம்மா உணவகம், அம்மா மருந்தகம், அம்மா குடிநீர் போன்ற அனைத்துத் திட்டங்களையும் கொண்டுவந்து தமிழக மக்களை வாழ வைத்துக் கொண்டிருக்கின்ற, ஒப்பற்ற முதல்வராக வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, விவசாயத்தையே நம்பியிருக்கின்ற தொகுதி. அங்கு உற்பத்தியாகின்ற உணவுப் பொருட்களைப் பதப்படுத்துவதற்கு, சிப்காட் வளாகத்தில் தேவையான இடங்களும், தேவையான சூழ்நிலைகளும் நல்ல முறையில் இருக்கின்ற காரணத்தினால், மானாமதுரையில் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரையில் இருக்கின்ற சிப்காட் தொழிற்பேட்டை வளாகத்தில் இடம் இருக்கின்றது. அங்கு தொழில் தொடங்குவதற்கு தொழில் முனைவோர்கள் யாரேனும் முன்வருவார்களேயானால்,*

நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்கள் 9 தென் மாவட்டங்களின் முன்னுரிமைப் பட்டியலில் சிவகங்கையையும் சேர்த்து இருக்கின்றார்கள். தொழிற்பேட்டைக்கான நிலம் எடுக்கப்பட்டதற்கு பின்னர், அங்கே புதிய தொழிற்சாலைகள் வருகின்றபோது, உணவு பதப்படுத்தும் தொழிற்சாலையை அமைப்பதற்கான திட்டம் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மானாமதுரை தொகுதி, ஒரு பின்தங்கிய தொகுதியாகும். ஏழையெளிய மக்களை உள்ளடக்கிய தொகுதியாகும். அங்கே எந்தவிதமான தொழிற்சாலைகளும் கிடையாது. அந்தப் பகுதியில் தொழிற்சாலையை உருவாக்குகின்றபோது, விவசாயத்தையே நம்பி இருக்கின்ற அந்த விவசாயத் தொழிலாளர்களுடைய குழந்தைகள், வேலைவாய்ப்பு பெறுவதற்கு வாய்ப்பு உருவாகும்.

அந்தப் பகுதியில் பஸ் போக்குவரத்து, இரயில் போக்குவரத்து வசதிகளும் அதிகமாக இருக்கின்றன. அந்தப் பகுதியில் எந்தவிதமான தொழிற்சாலைகளும் இல்லை என்கின்ற காரணத்தாலும், அதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உற்றுநோக்கி, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, அரசு சார்பில் அங்கே தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மானாமதுரை பகுதியிலே தொழிற்சாலை துவங்கவேண்டுமென்று சொல்லியிருக்கின்றார். ஏற்கெனவே, அந்தப் பகுதியிலே இருக்கின்ற

*சிப்காட் வளாகத்தில் 43 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. அவற்றில் கிட்டத்தட்ட 5,000 பேர் பணியாற்றி வருகிறார்கள். இன்னும் அந்தப் பகுதியில் 490 ஏக்கர் நிலம் இருக்கின்றது. தொழில்முனைவோர்கள் தொழில் தொடங்க முன்வருவார்களேயானால், டிட்கோவுடன்—*Joint venture*—கூட்டு முயற்சியின் வாயிலாக, புதிய தொழில் தொடங்குவதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 111, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

111—

புதிய பேருந்து

***14412—திரு. ஆர்.என். கிட்டுசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோட்டிலிருந்து மொடக்குறிச்சி, சிவகிரி, முத்தூர் வழியாக பழனிக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் கொடி அசைத்து துவக்கி வைக்கப்பட்டு, ஈரோட்டிலிருந்து மொடக்குறிச்சி, சிவகிரி, முத்தூர் வழியாக பழனிக்கு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.*

திரு. ஆர்.என். கிட்டுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியை அவையில் எழுப்பும் முன்னரே அந்தக் கேள்விக்கான விடையைக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல்,*